JUDICIAL MAGISTRATE COURT, AMBATTUR
DEPOSITION OF WITNESS

CC.No. 105/2021 Date:12.02.2026 P.W. 4 / LW

| | |
|---|---|
| பெயர் | திரு. சுரேஷ் குமார் |
| தந்தை பெயர் க/பெ | திரு. செல்வராஜ் |
| முகவரி | எண்.17/8, வாசுதேவ தோட்டம், பொன்னியம்மன் மேடு, சென்னை |
| கிராமம் | |
| மாவட்டம் | |
| ஜாதி | |
| தொழில் | |
| மதம் | |
| வயது | 44/2026 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 12th day of February 2026.

எதிரிகள் 1,2 ஆஜர். 3, 4 எதிரிகள் தரப்பில் சட்டப்பிரிவு 355 பி.என்.எஸ்.எஸ் படி மனுதாக்கல் செய்து அனுமதிக்கப்படுகிறது.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சியாக**

2வது எதிரி விஜி என்பவர் கொடுங்கலூரில் அவரது சொந்த வீட்டில் எவ்வளவு நாட்கள் வசித்தார்கள் என்றால் மெர்லின் என்பவரின் சீமந்தம் வரை அங்கு வசித்தார்கள். நான் திருமணம் ஆகி 2 மாதத்திற்குள் 2 முறை அவர்களை பார்க்க சென்றுள்ளேன். குழந்தை பிறந்த பின்பு நான் அங்கு செல்லவில்லை. மெர்லினும் குழந்தை பிறந்த பிறகு கொடுங்கலூருக்கு செல்லவில்லை. திருமணம் நிச்சயம் ஆனகு முதல் குழந்தை பிறந்த கால வரை 2ம் எதிரி மற்றும் 3, 4 எதிரிகள் விருகம்பாக்கத்தில் தனி வீட்டில் வாடகைக்கு இருந்தார்கள் என்றால் சரியல்ல. கொடுங்கையூர் வீட்டில் 2007 முதல் 2010 வரை எதிரி விஜி குடியிருந்தார் என்றால் சரியல்ல. பின்பு விருகம்பாக்கத்திற்கு வாடகைக்கு சென்று அன்று முதல் இன்று வரை விருகம்பாக்கத்தில் தான் வசித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. தனி வாடகை வீட்டிற்கு மெர்லினின் அப்பா வாடகை குடுத்ததாக சொல்லியுள்ளேன். ஆனால் 1வது மற்றும் 2வது எதிரிகள் தலா ரூ. 50,000/-, ரூ.30,000/- வாடகை கொடுத்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. 1வது எதிரி பெஞ்சமின் வேறு பெண்ணுடன் தொடர்ப்பில் இருந்ததாக சொல்லியுள்ளேன். அவர் யாருடன் தொடர்பில் இருந்தார் என்ற விவரம் குறித்து எனக்கு தெரியாது. மெர்லின் சொல்லிதான் தெரியும். ரூ.5,00,000/- தொகை வரதட்சனை கேட்டு கொடுமைப்படுத்தியதாக சொல்லியுள்ளேன். எந்த தேதியில், எந்த இடத்தில் வைத்து வரதட்சனை கேட்டு

கொடுமைப்படுத்தினார்கள் என்றால் பெருங்குடி வீட்டில் வைத்து வரதட்சனை கேட்டார்கள். தேதி தெரியவில்லை. பெஞ்சமினுக்கு அவர் பார்த்த வேலை போன பின்பு வரதட்சனை கேட்டு கொடுமைப்படுத்தினார்கள். குழந்தை பிறந்த பின்பு தான் வரதட்சனை கேட்டார்கள். மேற்கண்ட வரதட்சனை தொடர்பாக மெர்லினோ, அவரது அப்பாவான விருப்ப ஓய்வு பெற்ற SSI யோ எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் அதை பற்றி தெரியவில்லை. ஆஜர் 2 வது எதிரியும், 4 வது எதிரியும் அவருகளுக்கு சொந்தமான வீட்டை விற்றதாக செவால்லியுள்ளேன். அது அவர்கள் சுய சம்பாதியத்தில் வாங்கப்பட்டது என்று சொன்னால் அது பற்றி தெரியாது. அந்த வீட்டை 2021 ஆம் ஆண்டு ரூ.43 லட்சத்திற்கு விற்பனை செய்தார்கள் என்றால் இல்லை. ரூ43 லட்சம் என்பது அரசு வழிகாட்டு மதிப்பீட்டு தொகையாகும். ரூ.1 கோடிக்கு விற்பனை செய்ததற்கு ஆவணம் எதுவும் என்னிடம் இல்லை. மெர்லின் என்பவர் ஆடம்பர செலவு செய்து அதிக கடன் ஏற்படுத்தியதால் அந்த கடனை அடைப்பதற்காக 2 வது எதிரி மேற்கண்ட சொத்தை விற்றார் என்று சொன்னால் சரியல்ல. 2 வது எதிரி மற்றும் 4 வது எதிரி ஆகியோரின் பூர்வீகம் கன்னியாகுமரி என்றால் அவர்கள் கன்னியாகுமரியை சேர்ந்தவர்கள் என்று தெரியும், அவர்கள் பூர்வீகமா என்று தெரியாது. கன்னியாகுமரியில் நடந்த வரவேற்பு நிகழ்ச்சியில் நான் கலந்து கொள்ளவில்லை. பெஞ்சம் வேலையில் இருந்து நீக்கப்பட்டதற்கு ஆவணம் எதுவும் என்னிடம் இல்லை. எதிரிகள் விஜி மற்றும் சேகர் Tik Tak செய்ததாக சொல்லியுள்ளேன். அதை நான் பார்த்துள்ளேனா என்றால் விஜி Tik Tak ஐ பாத்துள்ளேன். சேகரின் விடியோவை பார்த்ததில்லை. அதற்கு தற்போது என்னிடம் ஆவணம் இல்லை. மேற்கண்ட Tik Tak செய்து வரும்தகவல் திருமணத்திற்கு முன்பே தெரிந்திருந்தால் இந்த சம்பந்தம் ஏற்பட்டிருக்காது. அது தான் பாதிப்பு ஆகும். 2 வது எதிரி கடந்த 10 ஆண்டுகளாக திரைதுறையில் சிறுசிறு வேடங்களில் நடத்து வருகிறார் என்றும், அது பூமணி குடும்பத்திற்கு நன்றாக தெரியும் என்று சொன்னால் சரியல்ல. பூமணி வட்டிக்கு பணம் குடுத்து வருகிறார். அவரிடம் நானும் வட்டிக்கு பணம் வாங்கி வாடிக்கையாளராக உள்ளதால் இந்த வழக்கு பற்றி எந்த விவரமும் நேரடியாக தெரியாமல் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க மெர்லின் மற்றும் பூமணி ஆகியோர் சொன்ன தகவலின் பேரில் அவர்களுக்கு ஆதராவ பொய் சாட்சியம் சொல்கிறேன் முற்றிலும் தவறு.

Typed to my dictation in open Court.
Read over to the witness and admitted
by the witness as correct.

Judicial Magistrate,
Ambattur